**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 35/2020**

**2026ம் வருடம்  ஜூன் மாதம் 8ம் நாள் திங்கட்கிழமை**

**பி.வா.சா.2** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு. வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதிவாணன் | த/பெ | தமிழ்பாண்டியன் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் தற்போது இராஜகம்பீரம் குரூப்பில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததன் பேரில் நான் இன்று ஆஜராகியுள்ளேன். இராஜகம்பீரம் குரூப் புல எண் 122/2பி முழுவதும் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. புல எண் 161/2 தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பட்டா எண் 490 ஆக முகம்மது இப்ராகிம் என்பவர் பெயரில் உள்ளது. யு.டி.ஆர் காலகட்டத்திலிருந்து மேற்படி முகம்மது இப்ராகிம் பெயரில் உள்ளது. அதற்கு முன்பு மேற்படி முகம்மது இப்ராகிமின் தகப்பனார் ஜமால் பெயரில் இருந்ததா என்றால் அதற்கான பதிவுகள் ஆட்சியர் அலுவலகத்தில் தான் இருக்கும். சர்வே எண் 161/2 ன் சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.1. சர்வே எண் 161/2 ன் கணினி அ பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.2, சர்வே எண் 161/2 மற்றும் 124/2பி ன் கணினி சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.3, சர்வே எண் 161/2 ன் புல வரைபடம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.4 . சர்வே எண் 161/2 ன் அடங்கல் கணக்கு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.5 சர்வே எண் 161/2 ன் அ பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.6. சர்வே எண் 124/2பி –ன் அ பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.7.

சர்வே எண் 124/2பி –ன் சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.8. சர்வே எண் 124/2பி –ன் சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.9. சர்வே எண் 124/2பி –ன் அ பதிவேடு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.10. சர்வே எண் 124/2பி மற்றும் 161/2 –ன் கணினி சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.11. சர்வே எண் 124 –ன் புல வரைபடம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.12. சர்வே எண் 124/1பி –ன் அடங்கல் கணக்கு உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா,சா.ஆ.13. சர்வே எண் 124/2பி என்பது பட்டா நம்பர் 615 சைய்யது மகன் ஜமால் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 615 ஜமால் பெயரிலிருந்து முகம்மது இப்ராகிம் பெயரில் 30.03.1988 ல் மாறியுள்ளது. ஜமால் என்பவர் மகன் தான் முகம்மது இப்ராகிம் என்றால் சரிதான். ஜமால் என்பவரின் இன்னோரு மகன் சுலைமான் என்றால் சரிதான். பட்டா எண் 615 ல் 124/2பி தவிர புல எண் 125/4சி, 127/10 ஆகியவையும் உள்ளது என்றால் சரிதான். புல எண் 125/4சி, 127/10 ஆகியவை யார் பெயரில் உள்ளது என்றால் புல எண் 125/4சி சுலைமான் பெயரில் இருந்து பியாரா ரசூல் பெயரில் மாறிஉள்ளது. புல எண் 127/10 சுலைமான் பெயரில் இருந்து பகுருதீன் பெயரில் மாறியுள்ளது. தேசிய நெடுஞ்சாலைக்கு ஆர்ஜீதம் செய்யப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் புல எண் 124/1பி ஆக மாறியுள்ளது என்றால் சரிதான். நத்தம் புல எண் 259/11 யார் பெயரில் உள்ளது என்றால் ஜமால் முகம்மது மகன் முகம்மது இப்ராகிம் பெயரில் உள்ளது. அதற்கான அடங்கல், புலப்படம் மற்றும் சிட்டா கொண்டு வந்துள்ளேன். சர்வே எண் 259/11 அடங்கல் பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ. 14, சர்வே எண் 259/11 சிட்டா உண்மை நகல் சா.சா.ஆ.15. சர்வே எண் 259/11 கணினி அ பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.16. சர்வே எண் 259/11 கணினி சிட்டா உண்மை நகல் சா.சா.ஆ.17. பட்டா மாறுதல் உத்திரவு இணையதள பதிவிறக்க நகல் சா.சா.ஆ.18. சர்வே எண் 259 புல வரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.19. சர்வே எண் 259/11 பட்டா எண் 138 முகம்மது

இப்ராகிம் பெயரிலிருந்து காதர் இப்ராகிம் மகன் ஷேக் அப்துல்லா பெயரில் 11.07.2024ல் பட்டா எண் 931 ஆக மாறியுள்ளது. மண்டல துணை வட்டாட்சியரின் உத்திரவின் பேரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 259/12 ஜமால் மகன் சுலைமான் பெயரில் பட்டா எண் 84 ஆக உள்ளது. சர்வே எண் 259/11 மற்றும் 259/12 நத்தம் சர்வேயின் போது ஒரே வீடாக இருந்தது இரண்டு புல எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 84 சுலைமான் பெயரிலிருந்து அவரது மகன் பகுருதீன் பெயரில் மாறியுள்ளது. பகுருதீன் பெயரில் 22.04.2022ல் மாறியுள்ளது. சர்வே நம்பர் 166/6 சம்மந்தப்பட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் அவ்வாறு ஒரு சர்வே எண்ணே இல்லை.

<u>குறுக்கு விசாரணை :-</u>

சா.சா.ஆ.6 அ பதிவேட்டில் முகம்மது இப்ராகிம் பெயரில் பட்டா மாற்றப்பட்டது சம்மந்தமாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள எஸ்.எல்.ஆரில் தான் பார்க்கவேண்டும். எஸ்.எல்.ஆர் யை பார்த்தால் யார் பெயரிலிருந்து யார் பெயருக்கு என்ன ஆவணத்தின் மூலம் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். சர்வே எண் 124/2பி ஜமால் பெயரில் எவ்வாறு பட்டா ஏற்பட்டது என்பதற்கான மேற்குறிப்பு அ பதிவேட்டில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 124/2பி என்பது பழைய நத்தம் சர்வே எண் 109/2 என்றால் சரியல்ல. சர்வே எண் 259/11 எந்த சர்வே நம்பரிலிருந்து வந்தது என்றால் சர்வே எண் 109/2 ஆகும். பொதுவாக நத்தமாக வகைப்பாடு செய்தால் அந்த நிலம் ஏற்கனவே நஞ்சை அல்லது புஞ்சையாக இருந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். சர்வே எண் 109/2 ஏற்கனவே நஞ்சை அல்லது புஞ்சையாக இருந்து நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். சர்வே எண் 109/2 அதற்கு முன்பு

அரசு புறம்போக்கு குடியிருப்பு நத்தமாக இருந்துள்ளது. சர்வே எண் 109/2 என்ன நிலமாக இருந்தது என்று எஸ்.எல்.ஆர் –யை பார்த்தால் தெரியவரும் என்றால் தெரியவராது எஸ்.எப் –யை பார்த்தால் தெரியவரும். சர்வே எண் 124/2பி என்பது பழைய நத்தம் புல எண் 109/2 ஆக இருந்து தற்போது புதிய நத்தம் புல எண் 259/11 ஆக மாறியுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு சாட்சி சம்மன் வந்த பின்பு நான் சம்மனில் குறிப்பிட்டுள்ள புல எண்களை நேரில் சென்று பார்வையிட்டேன். நான் அவ்வாறு பார்வையிட்ட போது அந்த புல எண்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று விசாரித்து எந்த ஆவணங்களின் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண் 161/2, 124/2பி இரண்டு சொத்துக்களும் முகம்மது இப்ராகிம் உயிருடன் இருந்த காலத்தில் தனித்து கிரையம் வாங்கி அவர் பெயரில் பட்டா ஏற்படுத்தி அனுபவம் செய்யப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அனுப்பப்பட்ட சம்மனில் சர்வே எண் 166/6 என குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு ஒரு சர்வே எண் எங்கள் கிராம கணக்கில் இல்லை. சர்வே எண் 125/4சி, 127/10 ஆகியவை சுலைமான் பெயருக்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் எஸ்.எல்.ஆர் –யை பார்த்தால் தான் தெரியும். சர்வே எண் 125/4சி, சர்வே எண் 127/10 ஆகியவை யு.டி.ஆர் காலத்தில் சுலைமான் பெயரில் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 125/4சி, 127/10 ஆகியவை யு.டி.ஆர் காலத்தில் ஜமால் பெயரில் உள்ளது. சர்வே எண் 125/4 சி, 127/10 யு,டி,ஆர் காலத்தில் ஜமால் பெயரில் இருந்து எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் மண்டல துணை வட்டாட்சியரின் உத்திரவின் பேரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. துணை வட்டாட்சியரின் நடவடிக்கை உள்ளதா என்றால் எனது சம்மனில் அதுபற்றி குறிப்பிடவில்லை அதனால் அதை கொண்டுவரவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பட்டா

மாற்றப்பட்டதற்கான குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. பட்டா மாறுதல் கோப்புகளை பார்த்தால் தான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை